**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 27/2015**

**Deposition of Witness for : PW 16**

**Name** : திரு. ரவிசங்கர்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24-08-2022.**

முதல் விசாரணை -

நான் 2014ல் சென்னை தடய அறிவியல் துறையில் இணை இயக்குநராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 2013ம் ஆண்டு வேலூர் வட்டார தடய அறிவியர் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்தபோது வேட்டவலம் காவல் நிலைய குற்ற எண் 67/2013, என்ற வழக்கில் இறந்த சார்லஸ் என்பவரின் உடலை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்து, மருத்துவரால் சேகரிக்கப்பட்ட உடல் உறுப்புகள் மற்றும் செங்கல், துணி, ரத்தம் ஆகியவைகளை நஞ்சியல் பரிசோதனைக்காக ஆய்வகத்தில் என்னால் பெறப்பட்டது. மேற்படி பொருட்களை பகுப்பாய்வு செய்ததில் போதை பொருட்களோ, நஞ்சுப் பொருட்களோ, ஆல்கஹாலோ கண்டறியப்படவில்லை என்பதை ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். நான் வழங்கிய நஞ்சியல் அறிக்கை TOX/326/2013/நாள் 19.4.2013 அ.சா.ஆ.20, மேலும், அதே வழக்கில் திருவண்ணாமலை மாவட்ட நீதித்துறை நடுவர் எண். 2 ன் பெறப்பட்ட அறிக்கையின் படி ஒரு காகித பொட்டலத்தில் 1 1/2 கிலோ எடையுள்ள செங்கல் துண்டு 9.4.2013 அன்று பெறப்பட்டது. அதில் ரத்தக் கரை காணப்பட்டது. ரத்த பிரிவு பரிசோதனைக்காக சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆய்வறிக்கையில் செங்கல் ரத்தம் காணப்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது. VLR/BIO/80/2013. நாள் 16.4.2013 மற்றும் VLR/BIO/81/2013/ நாள் 16/4/2013 அ.சா.ஆ.21 . மேலும் அதன் தொடர்ச்சியாக பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து 1) ரத்தம் தோய்ந்த ஜல்லடை துணி, 2) மாதிரிக்காக எடுக்கப்பட்ட Gauze கிளாத் மேற்சொன்ன இரண்டு மாதிரிகளும் சென்னை தடய துறை ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு Serology Report க்காக அனுப்பி வைக்கப்பட்டதற்கு உண்டான கோரிக்கை விண்ணப்பம் அ.சா.ஆ.22. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

ஒரு நபர் குடித்திருந்தால் 3 அல்லது 4 மணி நேரத்திற்குள் அது Dilute ஆகும் என்றால் Dilute ஆக வாய்ப்பு உள்ளது. அதே போல் அவருடைய ரத்தம் Consitute செய்தால்

அதன் தன்மையை அறிய முடியாது என்றால் சரிதான். கல் மற்றும் Gauze துணியில் என்ன வகையான ரத்தம் என்பது என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் அதற்கான வசதிகள் இல்லை. அதில் உள்ள ரத்தம் இறந்தவரின் ரத்தம் தானா என்பதை குறித்து என்னால் சொல்ல இயலாது என்றால் Serology Report ல் தான் தெரியவரும்.

ஓம்/- ரவிசங்கர்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.